105

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ரு. விபவஹூ ஆடிமீ பகுதி எ.
Vol 5. *July & August 1928.* No. 7.

மதுரகவிகள் வினவும், அதற்கு விடையும்.

மதுரகவியாழ்வாரென்பார் ப்ரபந்நஜனகூடஸ்தராகிய நம்மாழ்வாரின் சிஷ்யரானவரென்பதை யாவருமறிவர். இவர் திருவயோத்தி முதலிய முக்திதரும் க்ஷேத்திரங்கட்கு யாத்திரையாக எழுந்தருளியிருந்த காலத்து இவர் கண்ணிற்குத் தென்திசையில் ஒருதிவ்ய தேஜஸ் புலனாயிற்று. அதை ஆராயவேண்டும் என்ற கருத்துடையவராய், தென்திசைநோக்கிச் செல்லலுற்று ஆழ்வார் திருநகரியடைய அந்தத்திவ்யஒளி மறைந்தது. அப்பொழுது மதுரகவிகள் 'இந்தத் திவ்யவொளிக்கு விளைவிடம் இவ்விடமேயாகும்' என்று கருதி அவ்விடத்தில் திருப்புளியாழ்வாரடியில் பகவத்தியானத்தில் எழுந்தருளியிருந்த ஆழ்வாருடைய நிலைமையைக்கண்டு 'நம்கண்ணிற்குப் புலனான திவ்யஒளிக்கு ஆகரபூதராயிருப்பார் இவரேயாவர்' என்று மதித்து ஆழ்வாரைநோக்கி "செத்ததின் வயிற்றில் * சிறுகுட்டி பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்" என்று வினவினர். ஆழ்வார் "கானலோடிய காட்டில் சிறியது பிறந்தால் அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று விடையளித்தார். இந்த வினவிடைகட்கு விரிவாய் இங்குப் பொருளெழுதப்பெறும். இதுநிற்க;

இங்கு மதுரகவிகள் இந்தக் கேள்வியைத் தம் திருவுள்ளத்தில் லக்ஷ்யமாகக்கொண்டு முக்யமான கேள்வியாகக்கேட்டு ஸம்சயமக

* சிறியது என்றும் பாடமுண்டு.

லப்பெற்று ஆழ்வாரையே பரமாசார்யராகக் கொண்டொழுகிறாராத லால் இவரது திருவுள்ளத்தில் இதுவே பெரியஸம்சயமாக விருந்த தென்பதும், இதைப் பல்லாரிடத்திலுங்கேட்டும் அதற்கு அவர்கள் தக்கவிடையளித்திலர் என்பதும், ஆத்மோஜ்ஜீவனத்திற்குறுப்பா கிய அர்த்தவிசேஷம் இதில் அமைந்துள்ளதென்பதும் ஊகிக்கக் கிடக்கின்றன. மேலும் கேள்விகேட்டார் வேதவேதாங்கங்களை நன் கறிந்த மதுரகவியாழ்வாராயும்; விடையளித்தார் மயர்வற மதிநல மருளப் பெற்றவராகிய நம்மாழ்வாராயு மிருத்தலால் இவ்வினவிடை கள் வேதாந்த விழுப்பொருளாயிருக்குமென்பது சொல்லாமலே பெறப்படும்.

இங்கு மதுரகவிகள் கேட்டகேள்வி ஸகலவேதஸாரஸங்க்ரஹ மான § ப்ரணவார்த்தமாய் விளங்கும். விடையோ ப்ரணவத்தின் விவரணமான நமோநாராயண பதங்களின் அர்த்தங்களாம். ஆக இவ்வினவிடைகள் திருவஷ்டாக்ஷரமந்த்ரத்தின் அர்த்தமாக விளங் கும். திருவஷ்டாக்ஷரமந்த்ரம் பரமரஹஸ்யங்களுள் தலைசிறந் திருப்பதொன்றாதலான் இதன் கௌரவத்தைநோக்கி இவ்வின விடைகள் மறைபொருளாகக் குறிப்பிடப்பெற்றன.

† முமுக்ஷுக்களாயிருப்பாருக்கு முதன்முன்னம் அநுஸந்திக்

---

§ ப்ரணவம் ஸகலவேதஸாரஸங்க்ரஹமென்பது "𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾𑌃 𑌪𑍍𑌰𑌣𑌵𑍇 𑌪𑌰𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃, 𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌣𑌵𑌮𑌭𑍍𑌯𑌸𑍇𑌤𑍍" என்றும், "𑌓𑌂𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌭𑌵𑌾 𑌵𑍇𑌦𑌾 𑌓𑌂𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌃 𑌸𑍍𑌵𑌰𑌾𑌃, 𑌓𑌂𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌭𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌜𑌙𑍍𑌗𑌮𑌮𑍍" என்றும் சொல்லப்பட்ட ப்ரமாணங்களால் அறியலாம். இவற்றின் பொருள்களாவன:— வேதங்கள் ப்ரணவத்தையே ஆதியாகயுடையனவா யிருக்கின்றன; இவை ப்ரணவத்திலே முடிவடைகின்றன; சப்தஸ்வரூபங்க ளெல்லாம் ப்ரணவமே; ஆகையால் ப்ரணவத்தை அப்யஸிக்கவேண்டும்; வேதங்கள் ஒங்காரவடிவமாயிருக்கிற ப்ரணவத்திலிருந் துண்டாகின்றன; ஸ்வரங்களும் ப்ரணவத்திலிருந்து உண்டாகின்றன; ஜகத்திலுள்ள ஸ்தாவர ஜங்கமப்பொருள்களெல்லாம் ப்ரணவத்திலிருந்து உண்டாகின்றன; என்பன வாம்.

† இங்கு முமுக்ஷு என்ற சொல் எம்பெருமானையடையவேண்டுமென்ற காதலால் ஸம்ஸாரபந்தத்தைக் கடக்கவேண்டுமென்ற விருப்புடையவனை யுணர்த்தும்.

கத்தக்கதும் ¶ த்யாஜ்யோபாதேயஜ்ஞானத்தைத் தெரிவிப்பதும் திருவஷ்டாக்ஷர மந்த்ரமேயாம். இன்னும் இம்மந்திரத்தை "வேதங்களும் ரிஷிகளும், ஆழ்வார்களும் ஆசார்யர்களும் விரும்பினார்கள்." என்பதனால் இது சிஷ்டர்களால் பரிக்ரஹிக்கப்பட்டதென்பதுமறியலாம். மேலும்,

மதுரகவிகள் கேட்டகேள்வி ப்ரணவார்த்தத்தைப் பற்றியதாயிருக்குமாகில் இவர் நமோநாராயண பதங்களின் அர்த்தமறியவில்லையா? அல்லது அறிந்துகொண்டு பரீக்ஷார்த்தமாகக் கேள்வி கேட்டனரா வெனின்? வினவாவது:— கருதியவற்றை அறிந்துகொள்ள வேண்டும் என்ற இச்சையை வெளிப்படுத்துவது. அது மூவகைப்படும். அறியான்வினவும், ஐயவினவும், அறிபொருள்வினவுமென. அவற்றுள் இவ்வினா அறியான்வினவாகும். அறியான் வினவென்பது ஒருவகையானும் அறியாது வினவுவது என்று பொருள் கொள்ளலாகாது. ஒருவகையாலும் அறியப்படாத பொருள் வினவப்படாமையிற் பொதுவகையானறியப்பட்டுச் சிறப்புவகையான் அறியப்படாமைநோக்கி அறியான் வினவாயிற்று. இவர் ப்ரணவார்த்தத்தைப் பொதுவகையானறிந்து சிறப்புவகையானறியாது வினவினரென்பது பின்னர் விவரிக்கப்படும். இனி, வினவின் பொருளுரைக்கப்பெறும். அதுவருமாறு:—

செத்ததின் வயிற்றில்-பகவத்விஷய ஜ்ஞானமாகிய ப்ராணனுக்கு யோக்யதையில்லாத ஜடவஸ்துவினிடத்தில் "ஸம்ஸாராக்நி விதீபந வ்யபகத ப்ராணாத்ம ஸஞ்ஜீவநம்" "ஸம்ஸாராக்நி விதீபந வ்யபகத ப்ராணாத்ம ஸஞ்ஜீவநம்" (ஸம்ஸாரமாகிய அக்னியின் வெப்பத்தால் ஸத்தையிழந்த ஜீவனை உயிர்ப்பிக்கிற பகவத்விஷயஜ்ஞானமாகிய ப்ராணன்) என்று பாஷ்யகாரரும் பகவத்விஷயஜ்ஞானத்தை ப்ராணனாக வருளிச்செய்தார். ஆகனால் இங்குப் பகவத்விஷயஜ்ஞானத்தை ப்ராணனாகச் சொல்லப்பட்டது. இதனால் ப்ரணவத்தில் மகாரத்தால்

¶ த்யாஜ்யோபாதேய ஜ்ஞானமாவது—விடத்தக்கது இது பற்றத்தக்கது இது என்று பகுத்தறியுமறிவாம். திருமந்திரத்தில் உகாரநமப்பதங்களால் ஆத்மஸ்வரூபத்திற்குச் சேராதவிலக்குவிதிகளுரைக்கப்படுகின்றமையால் இது த்யாஜ்யோபாதேயஜ்ஞானத்தின் உண்மையை விளக்குவதென்பதறியலாம்.

லக்ஷணையாகக் கிடைக்கப்பெற்ற அசித்துவர்க்கங்கள் சொல்லப்பட்டன. மகாரத்திலே லக்ஷணையாக அசித்துவர்க்கங்கள் எவ்வாறு சொல்லப்படுகிறதெனின்; பட்டர் ப்ரணவார்த்தத்னத ப்ரஸ்தாபிக்கிறவிடத்தில் "ஃகாராாஜெ்ா ஜீவஸூஃ உவகூரணம் வெெஷ்ணவஜிஃம்" "மகாரார்த்தோ ஜீவஸ்தது பகரணம் வைஷ்ணவமிதம்" என்று அருளிச்செய்தார். இதன் பொருளாவது:— மகாரத்திற்கு அர்த்தம் ஜீவனும் அவனுக்கு போகஸாதனமாயிருக்கின்ற அசேதனமும் விஷ்ணுஸம்பந்தமுடையன. அஃதாவது விஷ்ணுவுக்குச் சேஷமாயிருப்பன என்பதாம். மகாரம் மந ஜ்ஞாநே என்கிற தாதுவினாலே ஜ்ஞாநத்தையுணர்த்தும். அது "ஶுணெஶூாதயஃ வுஂஸி ஶணிஂஹாஸூுதஅதி" 'குணேசுக்லாதய: பும்ஸிகுணிலிங்காஸ்து தத்வதி' குணபதம் குணியைக்குறிப்பிடும் என்கிறநியாயப்படி ஜ்ஞாநகுணத்தையுடைய ஆத்மாவையுணர்த்தும். ஆதலால் மகாரத்தின் சக்யார்த்தம் ஆத்மாவென்பது பெறப்படும். "ஶக்யஸஂவஂயஃ லக்ஷணஂ" "சக்யஸம்பந்த: லக்ஷண:" (ஆற்றலுடைத்தாதற்பாலதன் ஸம்பந்தம் லக்ஷணை) என்றபடி. மகாரத்தின் சக்யார்த்தமாகிய ஆத்மாவுக்கு அசித்துப்பற்றுக்கோடாயிருக்கிறதினால் லக்ஷணையாக மகாரம் அசித்தையுணர்த்தியது. இவ்வாறன்றி மகாரம் மந ஜ்ஞாநே என்கிற தாதுவினால் ஜ்ஞாநத்தைக் குறித்துநின்று அது லக்ஷணையால் தனக்கு ஆசிரயமாகிய ஆத்மாவையுணர்த்திப் பின் லக்ஷிதலக்ஷணையால் ஆத்மாவுக்கு ஆசிரயமாகிய அசித்தையுணர்த்தியது என்று பொருள் கொள்ளினும் பொருந்தும்.

"ப்ரயாந கெக்ஷத்ரஜ்ஞு வதிஃ" "ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞ பதி:" என்று சாஸ்த்ரத்தில் ஈசுவரனுக்கு ஆத்மா எவ்வாறு சேஷமாகவிருக்கின்றதோ அதுபோலவே அசேதனமும் அவனுக்குச் சேஷமாயிருக்குமென்று சொல்லியிருக்க, ப்ரணவத்தில் வாச்யமாக அசித்தைச் சொல்லாதொழிந்ததற்குக் காரணம் யாதெனின்; போகமோக்ஷங்களின் அநுபவயோக்யத்தன்மை ஆத்மாவிற்கேயுளது என்று தோற்றுவதற்காகவும், சேஷத்வஜ்ஞாநம் உண்டாவதும் சேதனனுக்கே ஆகையாலும், ஈசுவரனுடைய அடிமைத்திறத்தின் ஸித்திக்கு உபாயஸ்வீகாரம் பண்ணுகிறவனும் சேதனனேயாகை

யாலும், எம்பெருமானுக்கு ஸ்ரீகௌஸ்துபமணிபோலவும் ஸ்ரீவத்ஸம்போலவும் அவனுடைய மகிழ்ச்சிக்கு விஷயமாயிருப்பானும் ஆத்மாவாதலாலும் இவனை ப்ரதானமாக வைத்து ப்ரணவத்தில் மகாரத்தால் உணர்த்தி, லக்ஷணையாக அவ்வாத்மாவுக்குக் கர்மாநுபவத்திற்கும் கைங்கர்யத்திற்கும் உபகரணமாயிருக்கின்ற அசித்தும் உரைக்கப்பட்டதெனக்கொள்க.

'சிறுகுட்டி' என்பது அணுவாய் சேஷத்வ பாரதந்த்ர்யங்களை யுடையவனுகையால் பரனாலே ரக்ஷிக்கத்தக்கவனாய், அறிவே தனக்கு வடிவாகக்கொண்டுள்ளவனுயிருக்கும் ஆத்மா என்றவாறு. இங்குச் சிறுமை என்பதின் சக்பார்த்தம் அணுவாம். இது லக்ஷணையாய் அணுபரிமாணத்தையுடையவனுகிய ஆத்மாவையுணர்த்தி நின்றது. குட்டி என்பதன் சக்யார்த்தம் அறியாப் பருவமுடைய பொருளாம். அறியாப்பருவமுடைய தொன்றற்குத் தன்னைத்தானே காத்துக்கொள்வதென்பதொன்றில்லையாதலால் அது மற்றொருவனாலே ரக்ஷிக்கத்தகும் இயல்பிற்றுயிருக்குமென்பது அர்த்தத்தாலே பெறப்படும். இதனுல் ப்ரணவத்திலுள்ள மகாரார்த்தஞ் சொல்லப்பட்டது. மகாரம், மந ஜ்ஞாநே என்ற தாதுவினுல் ஆத்மா ஜ்ஞாநஸ்வரூபனென்றும், மாங் மாநே என்ற தாதுவினுல் அணுபரிமாணமுடையவனென்றும் பொருளுணர்த்துமாதலால் இங்குச் சிறுகுட்டி யென்பதும் இப்பொருள் குறித்து நின்றவாறு காண்க.

'பிறந்தால்' என்றது ஸ்ரீய:பதியான எம்பெருமானுக்கே யான் அடிமை என்கிற பகவதநந்யார்ஹஜ்ஞாநத்தாலே ஸத்தையுடையவனுனல் என்றவாறு. இதனுல்அகார உகாரங்களின் அர்த்தஞ்சொல்லப்பட்டது. பிறந்தால் என்பது இங்கு அந்த ஜ்ஞாநம் பிறப்பது அருமையாம் என்னும் பொருள் குறித்து நின்றது; "உண்டியே உடையே எனவுகந்தோடும் இம்மண்டலத்"தில் பகவத்விஷயஜ்ஞாநமுண்டாவது அருமையன்றே! மேலே சிறுகுட்டி என்றதனுல் ஆத்மா ப்ரஸ்தாபிக்கப்பட்டது. நித்யமான ஆத்மாவுக்குப் பிறத்தல் கூடாததினுல் இங்குப் பிறத்தலென்பதற்குப் பகவத்விஷய ஜ்ஞாநத்தாலே ஸத்தையுடையதானுல் என்று பொருளுரைக்கப்பட்டது.

பகவத்விஷயஜ்ஞாநமில்லாதபோது * ஆத்மாஸத்தையற்றதாய் விடும் என்பது பலவிடங்களிலும் வலியுறுத்தப்பட்டுளது. ஆழ்வார், தமக்குப்பகவத்விஷய ஜ்ஞாநமில்லாதபோது தம்மை அஸத்திற்குச்சமமாகக் கருதினரென்பது தோன்ற மயர்வறமதிநலம்எனக் கருளினன் என்று சுட்டியுரைக்காது "மயர்வறமதிநலமருளினன்" எனப்பொதுவாக அருளிச்செய்தார். பின்னர் பகவத்விஷயஜ்ஞாநம் பிறந்தபின்பு தாம் ஒருவர் உளராகக்கருதினராதலால் "என்மனனே தொழுதெழு" எனச்சுட்டி அருளிச்செய்தார். இன்னும் பகவத்விஷய ஜ்ஞாநமில்லாதபோது ஆத்மா ஒருவஸ்துவாகவும் கருதப்படமாட்டாதென்பதைமிகவுந்தெளிவாக "அல்லாவியுள்கலந்த" என்பதனால் அருளிச்செய்யப்பட்டுளது. அல்லாவி-ஒருவஸ்துவாக வெண்ணவொண்ணாத ஆத்மா. இதனால் பகவத்விஷயஜ்ஞாநமில்லாத ஆத்மா அசித்தைக்காட்டிலும் தண்ணியதாக மதிக்கப்படும் என்பது பெறப்படும். "அன்று நான் பிறந்திலேன்" என்று திருமழிசைப்பிரானும் பகவத்விஷயஜ்ஞாநம் பிறவாதமுன்பு தம்மைப் பிறவாதவராக மதித்தார். இவ்வாறன்றி, ஆத்மா சரீரத்தோடுவந்து பொருந்துவதைப் பிறப்பென்றும் சரீரத்தைவிட்டு நீங்குவதை இறப்பென்றும் வழங்குகின்ற முறைபற்றி இங்குப் பிறந்தால் என்பதற்கு ஆத்மா சரீரத்தில்வந்து பொருந்தினால் என்று பொருள்கொண்டு 'எத்தைத்தின்று எங்கே கிடக்கும்' என்பதற்கு எதையனுபவித்து எதைப் பற்றுக்கோடாகக் கொண்டிருக்குமென்று பொருள்கொள்ளிற்படு மிழுக்கென்னையெனில்; ஆத்மாக்கள் பூர்வஜந்மாந்தரங்களிற்செய்த புண்ணிய பாபங்கட்குத்தகுதியாகப் பல்வேறு சரீரங்களைக்கொண்டு பலாநுபவங்களைச் செய்யுமென்பது யாவராலும் தெளிவாக அறியப்

* ஆத்மா ஸத்தையற்றதாய்விடும் என்பது ஆத்மா உளதாதற்றன்மை ஒழிந்துவிடும் என்றவாறு. நித்யமான ஆத்மாவுக்கு இருத்தற்றன்மை ஒழிந்துவிடுமென்பது எவ்வாறு பொருந்துமெனின்; பகவத்விஷயஜ்ஞாநமில்லாத ஆத்மாவின் இருப்புளதாயினும் அதுயாதொரு பயனுமடையாதிருத்தல்பற்றி ஸத்தையற்றதாய் விடுமென்று சொல்லப்பட்டதெனக்கொள்க. ஸத்தையால் வரும் பயனின் அபாவம் ஸத்தையின் மேலேற்றி உரைக்கப்பட்டது. உலகில் பயனற்ற பொருளின் இருப்புளதாயினும் 'அஃதில்லை' என்று வழங்கும் பெருவழக்குண்மை பற்றியும் இவ்விஷயம் நன்கறியலாம்.

பட்டதோன்றுதலாலும் இதையொரு கேள்வியாக மதித்து ஸகல சாஸ்திரநிபுணராகிய மதுரகவிகள் கேட்கமாட்டாரென்பது வெள்ளிடைமலைபோலப் புலனுமாதலாலும் இங்ஙனம் பொருள் கொள்ளலாகாதென ஒழிக.

'எத்தைத்தின்று எங்கே கிடக்கும்' என்பது ஆத்மாவுக்கு ஸ்வரூபத்தைச் சொன்ன ப்ரணவம் § புருஷார்த்த † உபாயங்களைச் சொல்லாமையாலே அவ்வாத்மா எதைப் புருஷார்த்தமாகக்கொண்டு எவ்வஸ்துவை உபாயமாகப்பற்றியிருக்கும் என்றவாறு.

ப்ரணவத்திலுப்,தசதுர்த்தியாலும் (தொக்குநின்ற நான்காம் வேற்றுமையாலும்) உகாரத்தாலும் அகார ¶ வாச்யனுன எம்பெருமானுக்கே மகாரவாச்யனுன ஆத்மா அடிமையாவான் என்று சொல்லப்பட்டது. இதனுல் ஆத்மாவுக்கு ஸ்வரூபம் சேஷத்வமாம் என்பது புலனுயிற்று. லோகதேசிகனும் இவ்விடத்தில் "சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் அதில்லாதபோது ஸ்வரூபமில்லை" என்று அருளிச்செய்தார். சேஷத்வமே தனக்கு ஸ்வரூபமாகக்கொண்டுள்ள ஆத்மா தான் விரும்பியடையத்தக்கது இது உபாயமாகக் கொள்ளத் தக்கது இது என்று தெளிவாகப்ரணவத்திற்சொல்லப்படாமையாலே மதுரகவிகளுக்கு இவற்றை யறிந்துகொள்ளவேண்டும் என்ற பேரவாத்தோன்றி வினவலுற்றூர். இங்கு மதுரகவிகள் ஆத்மாவுக்குச் சேஷத்வமே ஸ்வரூபமென்பதே பொதுவகையானறிந்துகொண்ட விஷயமாம்; இவ்வாத்மாவுக்குப் புருஷார்த்த உபாயங்கள் எவையோ? என்பன சிறப்புவகையான் அறியலாகா விஷயங்களாம்.

இனி ஆழ்வாரருளிச்செய்த விடைக்குப் பொருளுரைக்கப் பெறும். 'கானலோடிய காட்டில்' என்பது தாரபுத்ர க்ஷேத்ராதிகளாகிய கானல்செறிந்த காட்டிலே என்றவாறு "ஸம்ஸார ஸாக³ரே கோ⁴ரே து³ஸ்தராயி வ்யாதி⁴ பீ⁴ஷணே, விஷய க்ஷுத்³ர க்³ராஹேஸ்மின் த்ருஷ்ணா வாதஸமீரிதே, புத்ர தா³ர க்³ருஹக்ஷேத்ர

§ புருஷார்த்தம்—புருஷனுல் வேண்டப்படுவது.

† உபாயம்—இஷ்டஸித்தியையும் அநிஷ்டநிவர்த்தியையும் செய்வது.

¶ வாச்யம்—பொருள்.

ஶ்ரமதருஷ்ணாம்பு வர்ஷெ'' "ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதி வ்யாக்ர பீஷணே, விஷய க்ஷுத்ர குல்மாட்யே த்ருஷா பாதபசா லினீ; புத்ர தார க்ருஹக்ஷேத்ர ம்ருகத்ருஷ்ணாம்பு புஷ்கலே" என்று ஸம்ஸாரம் மருகாந்தாரமாகிய காடாக உருவகஞ்செய்யப்பட்டுள்ளதினால் இங்கும் ஸம்ஸாரத்தைக் கானலோடிய காடு என்று சொல்லப்பட்டது.

தாரபுத்ராதிகளைக் கானலாக உருவகஞ்செய்ததின் கருத்து யாதெனின்; விடாய்கொண்டவன் கானலைக்கண்டு ஜலமெனக்கருதி அதைப் பருகுவதற்குப் பேரவாக்கொண்டு நீண்டநெறியைக்கடந்து சென்று பார்த்து 'அந்தோ! நாம் கானலைக்கண்டு ஏமாந்துவிட்டோம்' என்று பரிதபிப்பதுபோல தாரபுத்ராதிகள் போலித்தோற்றத்தால் அநுபவயோக்யப்பொருள்கள்போலக் காணப்பட்டு நிரூபித்துப் பார்த்தவிடத்து 'இவர்கள் நமக்கு அநுபவயோக்யப் பொருள்களாகார்' என்று கைவிடும்படியிருக்குமாதலால் சம்சாரம் கானலாக உருவகஞ்செய்யப்பட்டதெனக் கொள்க. இஃதன்றி எவ்வாற்றானும் இந்த ஸம்ஸாரத்தில் அநுபவயோக்யமான புருஷார்த்தமில்லையென்பதை நன்கு புலப்படுத்துவதற்காக இது கானலோடிய காடுஎன்று உருவகஞ்செய்யப்பட்டதெனப் பொருள்கொள்ளினும் பொருந்தும்.

'சிறியது பிறந்தால்' என்பது நெருப்புச்சட்டியில் தாமரை பூத்ததுபோல பகவத்விஷய ஜ்ஞாநமுண்டாவதற்குத் தடையாயிருக்கின்ற ஸம்ஸாரத்தில் ஆத்மாவுக்கு விசேஷஜ்ஞாநம் (பகவதநந்யார்ஹ சேஷபூதன் என்றஜ்ஞாநம்) உண்டானால் என்றவாறு. 'கானலோடிய காட்டில் சிறியதுபிறந்தால்' என்பது மதுரகவிகள் கேட்ட கேள்விக்கு விடையளிப்பதற்காக அநுவதித்தருளியதாம். மதுரகவிகள் தேகவிசிஷ்டனான ஆத்மாவுக்கு ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால் என்னும் பொருள் தோன்றக் கேட்டகேள்விக்கு ஆழ்வார், தாரபுத்திராதி விசிஷ்டனான ஆத்மாவுக்கு ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால் என்று பொருள்செய்து கொண்டதற்குப் பிரயோஜனம் யாதென்பதற்குப் பரிஹாரைக்கப்பெறும்.

தேகவிசிஷ்டனை ஆத்மாவுக்கு ஸ்வரூபஜ்ஞாநம் பிறப்பது அருமை, தாரபுத்ராதி விசிஷ்டனை ஆத்மாவுக்கு ஸ்வரூபஜ்ஞாநம் பிறப்பது அருமையினும் அருமையாம். எவ்வாறெனின்; ஆத்மா தன் சரீரத்தைநோக்கி 'இது நமக்குப் போகோபகரணமாகவிருக்கிறது' என்று புத்திபண்ணுகிறான். இங்ஙனம்புத்திபண்ணுகிறஇவன் தன் சரீரஸம்பந்திகளான தாரபுத்ராதிகளைநோக்கி 'இவர்களே நமக்குச் சிறந்த போகோபகரணப் பொருள்களாவார்கள்' என்று புத்தி பண்ணுகிறானதலால் இவனுக்குத் தன் சரீரத்திற்கொண்ட போக்யதா புத்தியைக்காட்டிலும் சரீரஸம்பந்திகளான தாரபுத்ராதிகளிடத்திற்கொள்ளும் போக்யதாபுத்தி அதிசயித்திருக்குமன்றோ! அதனால் ஆழ்வார், மதுரகவிகளின் வினவிற்குத் தக்கவிடையருளிச்செய்வதற்கு அதையநுவதிக்க வந்தவிடத்து 'கானமேலாடிய காட்டில் சிறியது பிறந்தால்' என்று அருளிச்செய்தார். மேலும் தாரபுத்ராதி விசிஷ்டனை ஆத்மாவுக்குத் தான்கருதியபடி ஸம்ஸாரத்தில் சுகாநுபவத்திற்குச் சாதனமாயிருக்கும் தன்மை ஒன்றுமில்லையாயினும் இருப்பதாகத் தோற்றுவித்து உண்மையான சுகசாதனங்களின் முயற்சியையும் அது தடுப்பதால் ஸம்ஸாரத்தைக் 'கானமேலாடியகாடு' என்றார். விடாய்கொண்டவன் கானலைப்பருகி விடாயகற்றுமாறில்லையிறே. அதுபோல சுகிக்கவிரும்பியவன் தாரபுத்ராதிகளை உபகரணமாகக்கொண்டு சுகிக்குமாறில்லை. உலகினர் மயக்கவுணர்வால் இவர்களை உபகரணமாகக்கொண்டு சுகிப்பதாகக் கருதுகிறார்களேயன்றிப் பிறிதில்லை. ஸம்ஸாரம் துக்கசாதனமாகவேயிருக்கும். "ஸംஸார ஸாகரം வொரம் அநந்தக்லேஶபாஜநம்" "ஸம்ஸார ஸாகரம் கோரம் அநந்தக்லேசபாஜநம்" (கொடிதாயும் எல்லையற்ற துக்கத்திற்கிருப்பிடமாயுமிருக்கின்ற ஸம்ஸாரமாகிய கடல்) என்பதனாலுமறியலாம்.

'அத்தைத் தின்று அங்கேகிடக்கும்' என்பது சேஷத்வ நிரூபகத்யா ஆத்மஸத்தாகாரணபூதனாய் ஸ்ரீய:பதியாயிருந்துள்ள அந்த அகாரார்த்தத்தையே போக்யமாகக்கொண்டு அதையே தனக்கு ரக்ஷகமாக அண்டைகொண்டுகிடக்கும் என்றவாறு. இதனால் ப்ரணவ விவரணமான நமோநாராயண பதங்களின் பொருளுரைக்கப்பட்டது. இதன் விவரம் பின்னர் விளக்கப்பெறும். மேலே 'சிறுகுட்டி' என்பதற்குச் சேஷத்வ பாரதந்தர்யங்களையுடையவனாகையால் பரனாலே ரக்ஷிக்கத்தக்கவனாயிருக்கும் ஆத்மாவென்று பொரு

ளுரைத்தற்கேற்ப இங்கு 'அத்தை' என்பதற்குச் சேஷத்வ நிரூபகதயா ஆத்மஸத்தாகாரணபூதனுப் ஸ்ரீய:பதியாயிருந்துள்ள அகாரார்த்தத்தை என்று பொருளுரைக்கப்பட்டது. ஆத்மஸத்தாகாரணபூதனுப் ஸ்ரீய:பதியாய் என்றபதங்கள் அகாரார்த்தம் என்பதற்கு விசேஷணங்களாய் நின்றன. சேஷத்வநிரூபகதயா என்பது ஆத்மஸத்தாகாரணபூதனுப் என்பதற்கு ஹேதுவாக்யமாக நின்றது.

முன்பு மதுரகவிகள் கேட்டகேள்வியில் 'பிறந்தால்' என்ற பதத்தால் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம் சேஷத்வமென்பது விளங்கியது. சேஷத்வமாகிய தர்மத்தையுடைய ஆத்மா தன்னைத் தானே ரக்ஷித்துக்கொள்வதென்ப தொன்றில்லையாதலால் இவன் தன் ரக்ஷணவிஷயத்தில் தனக்கு ப்ரதிஸம்பந்தியான சேஷியை எதிர்பார்த்துக்கொண்டிருப்பானென்பது சேஷத்வத்தின் லக்ஷணத்தை ஆராயவே பெறப்படும். இந்த ஆத்மதர்மமாகிய சேஷத்வத்தின் லக்ஷணம் முன்னர்த் தெரிந்துகொண்டாலன்றி ஆத்மாவின் ரக்ஷணம் ஈசுவரன் கையது என்ற உணர்ச்சி தோன்றுதாதலால் இங்குச் சேஷத்வலக்ஷணமுரைக்கப்பெறும்.

அதுவருமாறு:— லோகதேசிகன் சேஷத்வத்தின் லக்ஷணமருளிச் செய்கிறவிடத்தில் "சேஷமாகையாவது:— சந்தன குசுமதாம்பூலாதிகளைப்போலே, அவனுக்கிஷ்டவிநியோகார்ஹமாயிருக்கை" என்று அருளிச்செய்தார். இங்குச் சந்தனபுஷ்பம் தாம்பூலம் என்ற இவைகள் தமக்குப் பிரயோஜனமாயிருப்பதென்ற நிலே சிறிதுமின்றிப் பூசுமவனுக்கும் சூடுமவனுக்கும் பிரயோஜனமாயிருப்பதோடு அவர்கள் தம்பார்யை முதலானோர்கட்கு உபயோகப்படுத்துவதற்கும் உரிமையுடையனவாயிருக்கும். அவைபோல ஆத்மா அறிவுடைப் பொருளாயிருந்துவைத்தும் தனக்குப் பிரயோஜனமாயிருத்தல் என்ற நிலை சிறிதுமின்றியில் தன் ஸ்வரூபஸ்வபாவங்களால் ஸர்வேசுவரனுக்கு மகிழ்ச்சியை விளைவித்து விநியோககாலங்களில் அவனுக்கு உபயோகப்படுதற்குரியதாய்மாத்திரமிருப்பதன்றியில் அவனுக்குகந்தவர்களாகிய அடியார்கட்கு உபயோகப்படுத்துவதற்கும் யோக்யமாயிருத்தலாம். "யதெஷ்ட விநியொ௨ாஹம் ெஶஷ ஶஜ்ே௨ந கய்யதெ" "யதேஷ்ட விநியோகார்ஹம் சேஷசப்தேந கத்யதே" என்ற ப்ரமாணத்தினும் பரனுக்கு இஷ்டப்படி உபயோகப்படுத்துவதற்குரிமையாயிருப்பதே சேஷத்வத்தின்

லக்ஷணமென்பது தெளிவாக அறியலாம். பாஷ்யகாரரும் "வர கதாதிஶயாதாநெச்சயா உபாதெயத்வமெவ யஸ்ய ஸ்வரூவம், ஸஃ ஶெஷஃ" "பரகதாதிசயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம், ஸ:சேஷ:" பரனுக்கு அதிசயத்தை யுண்டாக்குகைக்காக ஸ்வீகரிக்கப்படுகை யாதொன்றுக்கு ஸ்வரூபம் அது சேஷம் என்று அருளிச்செய்தார். ஆத்மாவின் உண்மையான லக்ஷணமிதுவேயாதலால் ஆழ்வார் புருஷார்த்தத்தை நிர்ணயிக்க வந்தவிடத்தில் "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்று அருளிச்செய்தார்.

இதுநிற்க; ஆத்மாவுக்கு அசித்தைக்காட்டிலும் வேறுபட்டிருத்தல் முதலிய பலலக்ஷணங்களிருக்க அவற்றை யெடுத்துரைக்காமல் ப்ரணவத்தில் ஆத்மாவிற்குப் பகவச்சேஷத்வமே முக்யமான லக்ஷணமாக வுரைத்ததின் கருத்தையாராயுமிடத்து ஆத்மாவிற்குச் சேஷத்வஜ்ஞானமே உஜ்ஜீவனஹேதுவென்பது புலப்படும்.

பரதாழ்வான், தன்னை ராஜாவாக்குவதற்காக மணமுரசறைவிப்பதைக்கேட்டு 'அந்தோ! நம்சேஷத்வம் அழிந்துவிட்டதே' என்று துடிதுடித்து வஸிஷ்டமுதலானோர் கூடியிருக்கும் பெருந்திரளிடத்தில்வந்து வஸிஷ்டரையும் நிந்தித்து "ராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்ய" "ராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்ப" இராமபிரானுக்கு யானும் இந்தராஜ்யமும் அடிமைப்பொருள்கள். இரண்டடிமைப்பொருள்களுள் ஒன்று மற்றொன்றை ஆள்வதெப்படி? அங்ஙனம் ஆட்சிபுரியுமாகில் இந்தராஜ்யமே என்னையாளுக; என்றுரைத்தான். இதனால் சேஷத்வதர்மமுடையவனாகிய ஆத்மாவின் வாழ்வு ஸர்வேசுவராதீனமாயிருக்குமென்பது விளங்கும்.

இனி, அகாரத்திற்கு விசேஷணங்களாய்நின்ற இரண்டுபதங்களுள் முதற்பதமாகிய ஆத்மஸத்தாகாரணபூதனாய் என்பது நிரூபிக்கப்பெறும். அதுவருமாறு:— மேலே சேஷத்வலக்ஷணமுரைத்தவிடத்தில் ஆத்மா தன்ரக்ஷணவிஷயத்தில் அசக்தனாயிருப்பானென்பது பெறப்பட்டதினால் ஸர்வேசுவரன் ஆத்மாவின் ஸத்தைக்குக் காரணமாயிருப்பானென்பது தெளிவாம். இதுபற்றியே ஆத்மாவைக் குறித்துரைக்கின்றவிடத்தில் "ஸொஜீவநெநாயதி தெ ஸஸத்தாயாம் ஸ்யாஹாயதி, ருத்ராஸ்யம் ஹரெஸ்யாஶ்யம் ஸாஸ்ய ஸஷ

ஸூ’’ “ஸ்வோர்ஜ்ஜீவனேச்சாயதி மே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹாயதி, ஆத்மதாஸ்யம் ஹரேஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதாஸ்மர’’ உன்னுடைய உஜ்ஜீவனத்தில் எனக்கு ஆசையுண்டாகிலும், உன்ஸத்தை தான் அழியாமற்கிடக்கவேணுமென்று ஆசையுண்டானாலும் ஆத்மாவினுடைய தாஸ்யத்தையும், ஹரியினுடைய ஸ்வாம்யத்தையும் எப்போதும் ஸ்வபாவமாக நினைக்கக்கடவாய் என்று சொல்லப்பட்டுளது.

“ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதிவேண்டுகையாலே’’ ஆத்ம ஸத்தாகாரணபூதனாய் என்பதன் பின் ஸ்ரீய:பதியாய் என்ற விசேஷணமுரைக்கப்பட்டது. ஸ்ரீய:பதித்வமும் அகாரத்தின் அர்த்த பலத்தாலே கிடைத்தபொருளாம். லோகதேசிகனும் “இதிலே ஸ்ரீஸம்பந்தமும் அநுஸந்தேயம்’’ என்று அருளிச்செய்ததாலும் அறியலாம். சேஷத்வஜ்ஞானமுடைய ஆத்மா தன் ஸத்தைக்குக் காரணபூதனாயிருக்கின்ற ஸர்வேசுவரனை யநுபவித்து அவனைப் பற்றுக்கோடாகப் பற்றியிருப்பதை ஒழிய இவனுக்கு வேறு நிலையில்லை யாதலால் ஆழ்வார் அகாரார்த்தத்தையே போக்யமாகக்கொண்டு அதையே தனக்கு ரக்ஷமாக அண்டைகொண்டு கிடக்கும் என்ற பொருளமையுமாறு விடையளித்தார்.

இதுநிற்க, ஆத்மா தன்னை எவ்வாறு அபிமானிக்கின்றானோ அதற்குத் தகுதியாக இவனுடைய ஜீவனோபாயமிருக்கும். எவ்வாறெனின்; ஆக்மா தன்னை மிருகஜாதியில் ஒன்றாக மதித்தபோது தனக்கு ஜீவனோபாயம் புல்முதலியவைகளாயிருக்கும். தன்னை மனிதனாக அபிமானித்தபோது தனக்கு விர்த்திஹேது அன்னமுதலியவைகளாம். தன்னைத் தேவனாகப் புத்திபண்ணியபொழுது தனக்கு விர்த்திஹேது அமிர்தமாகும். தன்னை அடிவனாக அபிமானித்தபோது தனக்கு விர்த்திஹேது ஈசுவரவிஷயத்தில் மனோவாக்குக் காயங்களாற்செய்யும் அடிமையாயிருக்குமாதலால் சேஷத்வஜ்ஞானமுடைய ஆத்மா ஸர்வேசுவரனை யநுபவித்தன்றித் தரியானென்பது தெளிவன்றோ!

இனி, ஆழ்வாரருளிச்செய்த விடை ப்ரணவத்தின் விவரணமாமென்பதுரைக்கப்பெறும். அதுவருமாறு:— ப்ரணவத்தில் அகாரத்தின் விவரணம் நாராயணபதமாம். உகாரத்தின் விவரணம் நமப்பதமாம். மகாரத்தின் விவரணம் சதுர்த்தியாம். (நான்காம் வேற்

முறைமையாம்) இவற்றுள் இங்கு முன்னுரைத்தற்கேற்ப புருஷார்த்த உபாயங்களை இன்னபதங்கள் தெளிவாக எடுத்து விளக்குகின்றன என்பனமாத்திரமே ஆராயப்படும். நமப்பதமும், ஆயவென்ற சதுர்த்தியுமே முறையே உபாயத்தையும், புருஷார்த்தத்தையும் தெரிவிக்கின்றன. எவ்வாறெனின்;

நமப்பதம் ந + ம: எனப்பிரிபடுமாதலால் இரண்டு பதங்களாயிருக்கும். இவற்றின் பொருள்களாவன:— ம:—எனக்கு, ந-இல்லையென்பனவாம. அஃதாவது:—எனக்கு நான் உரியேனல்லேன் என்பதாம். இங்ஙனம் ஸ்வஸ்வாதந்தர்ய புத்தியகலவே தன்னைத்தானே ரக்ஷித்துக்கொள்வதென்பதின் தொடர்பொழியும். அதன்பின் தன் ரக்ஷணத்தில் தனக்குத் தலைவனான ஸர்வேசுவரன் கைபார்த்திருப்பதென்ற நிலையுண்டாம். அதன்மேல் அவனே உபாயமாவானென்ற உணர்வு பிறக்கும். ஆகையால் நமப்பதம், அர்த்தபலத்தாலே உபாயத்தைத் தெரிவிப்பதென்பதறியலாம். இவ்வாறன்றி நமப்பதமே பரமாத்மாவையுணர்த்துதற்கு வாசகமாகவிருக்கும் என்று சொல்வதுமுண்டு. இதற்கு ப்ரமாணம் யாதெனின்; "𑌪𑌨𑍍𑌥𑌾 𑌨𑌕𑌾𑌰 𑌉𑌦𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑍋 𑌮𑌃 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨 𑌉𑌦𑍀𑌰𑍍𑌯𑌤𑍇, 𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑌸𑍍𑌤𑍁 𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍋𑌽𑌯𑌂 𑌨𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌤𑍇, 𑌅𑌨𑌾𑌦𑌿𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍋 𑌯𑌶𑍍𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑌚𑍍𑌯𑍁𑌤𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃, 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑍇 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑍋𑌽𑌯𑌂 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌨𑌮𑌨 𑌨𑌾𑌮𑌵𑌾𑌨𑍍" "பந்தா நகார உத்திஷ்டோ ம: ப்ரதாந உதீர்யதே, விஸர்க்க: பரமேசஸ்து தஸ்யார்த்தோயம் நிரூப்யதே, அநாதி: பரமேசோ யச்சக்திமாநச்யுத: ப்ரபு:, ஸ்வப்ராப்தயே ப்ரதாநோயம் பந்தா நமந நாமவாந்" என்பதாம். இதன் பொருளாவது:— நகாரம், வழியாகிய உபாயமாகச் சொல்லப்படுகிறது; மகாரம் அதுவே ப்ரதாநமென்று நிரூபிக்கப்படுகிறது; விஸர்க்கம் அந்த ப்ரதாநமானவழி ஸர்வேசுவரனென்று சொல்லப்படுகிறது; ஆக நமப்பதத்தின் பொருளாவது:— அநாதியாய், ஸர்வாதிகனான ஸர்வேசுவரனாய், ஸர்வசக்தியோடு கூடினவனாய், அச்யுதனாகையாலே தன்னைப் பற்றினவரை விடாதவனாய், ஸ்வதந்தரனாயிருக்கிற ஸர்வேசுவரன் தன்னைப் பெறுகைக்கு ப்ரதானமானவழி தானே என்கிற அர்த்தத்தை காட்டுகையாலே நமஸ்ஸைத் தனக்கு நாமமாகவுடையவனாவான்; என்பதாம். இதனால் நமப்பதமே உபாயபூதனான ஸர்வேசுவரனைக் குறித்துநின்றதறியலாம்.

ஆய என்ற நான்காம் வேற்றுமையானது கைங்கர்யப்ரார்த்தனையைத் தெரிவிக்கின்றது. ஆத்மா அகாரவாச்யனாகிய ஸர்வேசுவரனுக்குச் சொத்தாய், தன்னோடுறவற்றவனாயிருப்பானென்று ப்ரணவ நமஸ்ஸுக்களால் பெறப்பட்டதினால், இவனுக்கு ஸமஸ்தநித்யவஸ்துக்களுக்கும் ஆதாரபூதனாய் விளங்குகின்ற நாராயணன் விஷயமான கைங்கர்ய ப்ரார்த்தனையே புருஷார்த்தமென்பது புலனாகிறதன்றோ! சேஷத்வ ஸித்தியின்பொருட்டு கைங்கர்யஞ்செய்பவனாகிய ஆத்மாவையும் இக்கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்பவனாகிய பரமாத்மாவையும் இந்தத் திருவஷ்டாக்ஷரமந்த்ரத்தில் நிதயவஸ்துக்களாகச் சொல்லப்பட்டுள்ளனவாதலால் இந்தக் கைங்கர்யப் பிரார்த்தனையும் நித்யமாம். இதுபற்றியே லோகதேசிகனும், 'படியாய்க் கிடந்துன்பவளவாய் காண்பேனே' என்கிறபடியே கைங்கர்ய ப்ரார்த்தனை வந்தேறியன்று; ஸ்வரூபப்ரயுக்தம். ஆகையால் 'விழுவிலா வடிமைசெய்யவேண்டும் நாம்'என்ற பிரார்த்தனையைக் காட்டுகிறது'' என்று அருளிச்செய்தார்.

ஆக, நமஸ்ஸாலும், சதுர்த்தியாலும் எம்பெருமானே உபாயமென்பதும், அவன் விஷயத்திற் செய்யும் கைங்கர்யமே புருஷார்த்தமென்பதும் ஸித்திக்கின்றனவாதலால் சேஷத்வஜ்ஞாநமுடைய ஆத்மா அகாரவாச்யனாகிய ஸர்வேசுவரனையே அநுபவித்து அவனையே உபாயமாகக்கொண்டிருப்பானென்பது ஒருதலையாம். ஆகலின் ஆழ்வார் இவ்வர்த்தத்தை உட்கொண்டு 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்று அருளிச்செய்தார்.

இந்த வினாவிடைகள், திருவஷ்டாக்ஷரமந்த்ரத்தின் பொருளாக விளங்குகின்றமைபால், இவை ப்ரபந்நாதிகாரிகட்கு நித்யாநுஸந்தானமாயிருக்கும் சீர்மையனவென்று அறியத்தக்கது.

ப. அ.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(63-ம் பக்கத்தொடர்ச்சி.)

“நித்யாஹிவாஞ்சித வரஸ்ர நீவஹாவெ:” “நித்யாபிவாஞ்சித பரஸ்பர நீசபாவை:”என்றும், “க்ரயவிக்ரயாஹா தஸயா ஸஜீலதெ” “க்ரயவிக்ரயார்ஹ தசயா ஸமிந்ததே”என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீவைஷ்ணவர்கள் பரஸ்பரம் உத்தேசியர்களாகையாலே

ஸ்ரீவைஷ்ணவர்களாய் ப்ரஹ்மவித்துக்களான கிருஹஸ்தர்கள் வந்த நீயர்களில்லையென்று சொல்லும் பக்ஷத்தில் இந்த ப்ரமாணங்கள் வியர்த்தங்களாம்.

ஈசுவரனுங்கூட ஜ்ஞாநிகள் விஷயத்தில், "நிரபெக்ஷம் முநிம் ஶாந்தம்" "நிரபேக்ஷம் முநிம் சாந்தம்" என்கிற வசனப்படி கௌரவிப்பதாக ப்ரமாணமிருப்பதால் இந்த விஷயம் கிம்புநர் ந்யாயஸித்தம். "யஜ்ஞோத்யயநம் தாநம் தபஃ ப்ரஹ்மசர்யம்" "யஜ்ஞோத்யயநம் தாநம் தப: ப்ரஹ்மசர்யம்" என்று தப:சப்தத்தாலே நிர்த்திஷ்டமான உத்தமாச்ரமத்தையுடையவர்களைக் காட்டிலும், "தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹுஃ" "தஸ்மாந் ந்யாஸமேஷாந் தபஸா மதிரிக்த மாஹு:" என்கிற சுருதியாலும், "அதிரிக்தம் தபஃச்ருதம்" "அதிரிக்தம் தப:ச்ருதம்" என்கிற உபப்ருஹ்மணத்தாலும் உத்தமாசிரமரூபமாகிய தபஸ்ஸைக் காட்டிலும் சரணாகதிரூபமான தபஸ்ஸு ப்ரபலமாகையாலே சரணாகதி நிஷ்டர்களான ஸ்ரீவைஷ்ணவகிருஹஸ்தர்கள் அதிகர்களாகையாலே வந்தநீயர்கள்.

இந்த ப்ரமாணங்களைக்கொண்டே கிருஹஸ்தவந்தந நிஷேதம் அவைஷ்ணவவிஷயமென்றே கொள்ளவேணும். ஜ்ஞாதாக்களுடைய உத்கர்ஷத்துக்கு ப்ரயோஜகம் வயஸ்ஸு ஆசிரமம் முதலானவைகளல்ல. பகவத்விஷய நிரதிசயப்ரீதிரூபமான பக்திவிசேஷத்தோடும் தப:ச்ரேஷ்டமான சரணவரணத்தோடும் கூடின வைஷ்ணவ ஸாமாந்யமும் உத்தேசியமாகையால் இதில் கிருஹஸ்தாகிருஹஸ்த விசாரம் அநுசிதம்.

மேலும், ஆசார்யதுல்யர்களாயும் பரஸ்பரோத்தேசியர்களாயும் தப:சிரேஷ்ட சரணாகதி நிஷ்டர்களாயுமிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால் பாரவசியத்தாலே தடுமாறி வந்தனம் முதலானஅநுவர்த்தநாதிகள் தன்னடையே வருமாகையால் இதை விதி தடுக்கமாட்டாது. இதனுடைய விஸ்தாரம் பூர்வாசார்யர்களுடைய் கிருந்தங்களில் காண்க. இவ்விடத்தில் விஸ்தர பயத்தாலே நிருபிக்கப்படவில்லை. "யதிரபி க்ருஹிணாம் வந்தநம் காரயந்தஃ" "யதிமபி க்ரஹிணும் வந்தனம் காரயந்த:" என்று யதிகர்த்ருககிருஹஸ்த வந்தனத்தை தோஷமாகச்சொன்ன சில கவிகளுடைய உக்தியைப்

பார்த்து இது அஸங்கதமென்று சொல்லுமவர்களுடைய விப்ரதிபத்தி நிராகரணத்தின் பொருட்டு இப்படி நிரூபிக்கலாயிற்று.

கீழ் நிரூபித்தபடி ப்ரமாணோபபத்திகளிருக்க இவைகளை நிரூபியாமல் அபிநிவேசத்தாலே இப்படி தூஷிப்பது அத்யந்தாநுசிதமென்பது வ்யக்தம் என்று சொல்லுவர்கள். மேலும் பெருமாள் உத்ஸவ காலங்களில் எழுந்தருளும்போது முந்தி இயல்கோஷ்டியும் பிந்தி வேதபாராயண கோஷ்டியும் நடந்து வருவதும் ஸம்பிரதாய ஸித்தமாயிருக்கிறது. இயல்கோஷ்டி க்ருஹஸ்தஸமுதாயமாகையாலே, அவர்கள் வந்தநீயர்களல்லரென்று அந்த கோஷ்டியை விலக்கி பெருமாள் ஸந்நிதியில்போய் தண்டம்ஸமர்ப்பிக்கிறார்கள் சில உத்தமாசிரமிகள். அதைப்பற்றி விசாரிப்போம். "ஸவைஸவபரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம:" "ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதே நாராயணாயநம:" என்ற கத்யஸூக்திப்படி பரிவாரத்தோடேகூடிய எம்பெருமானுடைய வந்தனம் ப்ராப்தமாயிருக்க இயல் கோஷ்டியும் பரிவாரகோஷ்டியில் சேர்ந்தபடியால் இந்த கோஷ்டியை க்ருஹஸ்த சமுதாயமென்ற புத்தியினாலே தெண்டம் ஸமர்ப்பிக்காமல் எம்பெருமான் ஸந்நிதியில் தெண்டம்ஸமர்ப்பிப்பது எம்பெருமானுடைய நிக்கிரஹத்துக்கு ஹேதுவாம் என்பது வ்யக்தம்.

அதுவுமன்றி, "உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும்" என்கிற பாசுரத்தின்படி விசேஷஜ்ஞர்களான ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியிலும், அருளிச்செயல் நடையாடுமிடத்திலும எழுந்தருளியிருப்பர் பாஷ்யகாரர் என்றிருப்பதால் இந்த கோஷ்டி ஸ்ரீபாஷ்யகாரருடைய கோஷ்டியேதவிர வேறு க்ருஹஸ்தஸமுதாயமென்று நினைத்து தண்டம்ஸமர்ப்பிக்காமலிருப்பது உசிதமாகுமா?

ஆக யதிதர்மஸமுச்சயத்தில் யதிகள் பிரசஸ்தனாக இருக்கிறவனையும், பிரஹ்ம நிஷ்டனையும் தெண்டன் ஸமர்ப்பிக்கக்கூடாதென்கிற இடத்தில் ப்ரசஸ்தசப்தமும் ப்ரஹ்மநிஷ்டசப்தமும் ஸாமாந்யவாசியாகையாலே "வைஷ்ணவோ வா வைஷ்ணவம் த்ருஷ்ட்வா" என்கிற விசேஷவசனத்தைக்கொண்டு வைஷ்ணவ்யதிரிக்த க்ருஹஸ்தவிஷயமென்றே கொள்ளவேண்டும்.

ஆதலால் ப்ரஹ்மவித்துக்களான க்ருஹஸ்தர்கள் உத்தமாசிரமிகளுக்கு வந்தனீயர்களே. இனி பகவதாராதநவிஷயம் நிரூபிக்கப்படும்.

(தொடரும்.)